குறள் வழி

திருக்குறள் முற்றோதல் மாத மின்னிதழ்

திருவள்ளுவராண்டு 2055 ஆன் (வைகாசி) - 2024 மலர்: 2 இதழ்: 6

திருக்குறள் சார்ந்த நூல்கள் அனைத்தும் ஒரே இடத்தில்











இந்நூலைப் பெற: **www.eStore.ValaiTamil.Com**

அறம் சார்ந்த உங்கள் தொழில் செழிக்க
உங்கள் விளம்பரம் திருக்குறள் புரவலராக
இங்கு இடம்பெறலாம்

தொடர்புக்கு
Email: Kural.Mutrothal@gmail.com
WhatsApp: +91 7305571897

"குறள் வழி" மாத இதழ்

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் செய்திகளை, செயல்பாடுகளை, நிகழ்ச்சிகளை, திருக்குறள் சார்ந்த உலக முன்னெடுப்புகளை, பரப்புரைகளை தாங்கி மாதம் ஒருமுறை வரும் இதழ்.

ஆசிரியர் குழு

வலைத்தமிழ் ச.பார்த்தசாரதி

முனைவர். திருமலை ராஜா

அஜய்குமார் செல்வன், சென்னை

மேகா சக்தி பாரதி, கோவை

வி.ஹேமா, திருச்சி

ஆலோசனைக் குழு

சி.இராஜேந்திரன், IRS (ஓய்வு)

இரவி சொக்கலிங்கம்

சூன் 2024 மாத, "குறள் வழி" மாத இதழ் உங்கள் வாசிப்பிற்கு

To Read as a book: https://www.valaitamil.com/kuralvazhi/ebook.html

Magazine Page : https://www.valaitamil.com/literature_thirukkural_kural-vazhi/

To download as PDF:
https://drive.google.com/file/d/1_DOFY3Q1oCx-GnxXZP5OBAPCviygLwmc/view?usp=sharing

உங்கள் கருத்துகளை எங்களுக்கு எழுத, படைப்புகளை அனுப்ப : kural.mutrothal@gmail.com

Facebook Page to LIKE and SHARE: https://www.facebook.com/groups/245630171535251

உங்கள் மாவட்டத்தில், உங்கள் அமைப்பில் நடைபெறும் திருக்குறள் சார்ந்த நிகழ்வுகளை எங்களுக்கு அனுப்பவும். மேலும், இவ்விதழ் குறித்த உங்கள் கருத்துகளை எங்களுக்கு எழுதி அடுத்த இதழில் வாசகர் பகுதியில் இடம்பெறச் செய்யவும்.

உள்ளே...

1. ஆசிரியர் பக்கம்

2. உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் – என்ன செய்கிறது?

3. உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் 2024 இலக்குகள் :

4. மாவட்டத் திருக்குறள் செயல்பாடுகள்

    4.1. தஞ்சாவூர் மாவட்டம்

    4.2. விருதுநகர் மாவட்டம்

    4.3. கன்னியாகுமரி மாவட்டம்

    4.4. தென்காசி மாவட்டம்

    4.5. சேலம் மாவட்டம்

    4.6. சென்னை மாவட்டம்

5. திருக்குறள் நிகழ்வுகள்.

6. திருக்குறள் இன்னும் உலக அலுவல் மொழிகளில் எத்தனை மொழிகளில் மொழிபெயர்க்கப்படவேண்டும்?

7. அமீரகத்தில் (UAE) "Thirukkural Translations in World Languages" நூல் வெளியிடப்பட்டது.

8. நவில்தொறும் நூல்நயம்

9. திருக்குறள் 2030 – பகுதி 2

10. தேடப்படும் திருக்குறள் அச்சு நூல்கள்

11. சிற்றினம் சேராமை! – கவிமாமணி இரஜகை நிலவன், மும்பை

ஆசிரியர் பக்கம்

திருக்குறள் ஆர்வலர்களுக்கு வணக்கம்,

குறள் வழி மாத இதழ் வரத்தொடங்கி ஒன்பதாவது இதழாகச் சூன் 2024 மாத இதழ் மலர்கிறது. இதுவரை நாம் தமிழ்நாட்டுக் குறள் செய்திகள் மட்டுமல்லாமல், உலகத் திருக்குறள் செய்திகளைத் தொகுத்து ஆவணப்படுத்துவது மட்டுமல்லாது உலகெங்கும் இணைய இதழாகவும், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் முக்கிய இயக்க ஒருங்கிணைப்பாளர்களுக்கு அச்சு இதழாகவும் அனுப்பிவைக்கப்பட்டுவருகிறது.

திருக்குறளுக்கு இவ்வளவு தரமான ஓர் இதழ் நேர்த்தியான ஒருங்கிணைப்பில் வந்தாலும் அதற்கான வரவேற்பு என்பது பெருமளவு இல்லை என்பது வியப்பாகத்தான் உள்ளது. தமிழில் திருக்குறளுக்கு எனத் திருக்குறளைத் தாண்டிச் சிந்திக்காத நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட 40 பக்க இதழ்கள் இல்லையென்றாலும் அதைக்கண்டு பெருமைப்படும் நிலையில் தமிழ்ச்சங்கம் இல்லை என்பது இன்றைய கள உண்மையாக உள்ளது.

ஒவ்வொரு மாதமும் குறைந்தது 1000 பிரதிகள் அச்சடிக்கப்பட்டு தமிழ்நாட்டின் திருக்குறள் ஆளுமைகளுக்கு, ஆர்வலர்களுக்கு அனுப்பவேண்டும் என்று திட்டமிடுகிறோம். அதற்கு விளம்பர ஆதரவு கிடைக்கும் நிலையில் சாத்தியமாகும். அதுவரையில் தொய்வில்லாமல் நம்மால் இயன்றதைத் தொடர்ந்து செய்யவேண்டியது நம்முடைய கடமையாக உணர்கிறோம்.

விரைவில் இவ்விதழ் பதிவு பெற்று உரிய வகையில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், நூலகங்கள் என்று பல திசைகளுக்கும் செல்லவேண்டும் என்ற நம் நெடுநாள் கனவு நனவாகும் என்ற நம்பிக்கை உள்ளது. காரணம் நம் திருக்குறள் முற்றோதல் இயக்கம் அமெரிக்கா, சௌதி அரேபியா என்று பல நாடுகளுக்கும் திருக்குறள் முற்றோதல் கற்றுக்கொடுக்கும் ஒருசூழல் கனிந்துள்ளது.

திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் புதிய ஆசிரியர்களை அடையாளம் காணும் பணி தொடர்ந்து வருகிறது. மாவட்டத்திற்கு ஒரு புரவலர், ஒரு பயிற்சியாளர், ஒரு ஒருங்கிணைப்பாளர் என்ற இலக்கில் தொடர்ந்து பயணிக்கிறோம்.

தொடர்ந்து பயணிப்போம்.
தொடர்ந்து உங்கள் கருத்துகளை எங்களுக்கு எழுதுங்கள்.

திட்ட ஒருங்கிணைப்பாளர்,
வலைத்தமிழ் ச.பார்த்தசாரதி

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் - என்ன செய்கிறது?

உலகப் பொதுமுறையாம் திருக்குறளை இளம் வயதிலேயே மாணவ மாணவியர் மனப்பாடம் செய்தால் வாழ்நாள் முழுவதும் மனத்தில் நிற்கும். "இளமையில் கல்வி பசுமரத்தாணி" என்பது பழமொழி.

திருக்குறள் மனித இனத்தின், குறிப்பாக தமிழர்களின் மாபெரும் பொதுவுடைமைச் சொத்து. திருக்குறள் நெறிகள் பரவப்பரவ, அறம் பரவும். தமிழ் மொழிப்பயிற்சியும், மாணவர்களுக்குக் கிடைக்கும். அறமும், மொழியும் வளரும். மேலும் அறமும், திறனும், ஒருங்கே வாய்ந்த இளைஞர் சமுதாயம் உருவாகிட வலுவான அடித்தளமாக திருக்குறள் மனனம் அமையும். சமுதாயத்தில் நல்லிணக்கமும், மனித நேயமும் வளரும்.

திருக்குறள் பொருள் பொதிந்த, பொருள் நிறைந்த, இகலில்லா இன்ப வாழ்க்கையின் கையேடு.

கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கும் மேலாக, 1330 திருக்குறளையும் மனப்பாடம் செய்து ஒப்பிக்கும் மாணவ மாணவியரை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு சான்றிதழ் மற்றும் பரிசுத் தொகை வழங்கி வருகிறது. திருக்குறள் முற்றோதல் செய்யும் 70 மாணவர்களுக்கு, 2021 ஆம் வருடம் வரை, தலா ரூ.10000/- திருவள்ளுவர் தினத்தன்று அரசு வழங்கி வந்தது.

இந்த சூழ்நிலையில் தமிழக அரசு 2022 ஆம் ஆண்டு சட்டசபையில் 70 மாணவர்கள் என்ற உச்சவரம்பை நீக்கியது.பரிசுத்தொகையும் உயர்த்தப்படும் என்று மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் சட்டசபையில் அறிவித்தார். {தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை. தமிழ் வளர்ச்சி மானியக் கோரிக்கை - 46 அறிவிப்புகள் (2021-2022)}. கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக இதுவரை ஆண்டுதோறும் பரிசு பெறும் மாணவர்களின் வயதைப் பார்த்தால் 95 விழுக்காடு மாணவ/மாணவியர் 14 வயதுக்குட்பட்டே இருக்கிறார்கள். ஆறு/ஏழாம் வகுப்புக்குள் மனனம் செய்துவிட்டால், பிறகு மேல் வகுப்புகளில் பொருளுணர்ந்து படிக்க ஏதுவாக இருக்கும். தனிவாழ்வில் நிறைவான வாழ்க்கை வாழவும், சமுதாய பிரச்சனைகளை திருக்குறள் துணையுடன் எதிர் கொள்ளவும், இளவயதிலேயே 1330 அருங்குறள் மனனம் பயனுள்ளதாக இருக்கும்.

இந்தப் பின்புலத்தில், வலைத்தமிழ், வள்ளுவர் குரல் குடும்பம், சர்வீஸ் டு சொசைட்டி என்ற மூன்று அமைப்புகளும் இணைந்து, தமிழ்நாடு, புதுச்சேரியில் ஏற்கனவே திருக்குறள் முற்றோதல் பயிற்சியளிக்கும் ஆசிரியர்களை ஒருங்கிணைத்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஒருங்கிணைப்பாளர், ஒரு பயிற்சியாளர், ஒரு புரவலர் அடையாளம் கண்டு அக்டோபர் 2021ல் தொடங்கப்பட்டது இவ்வியக்கம். எம்முடன் உலகத் தமிழ்வளர்ச்சி மன்றம், USA இணைந்து ஒரு மாவட்டத்திற்கு 2000 திருக்குறள் நூல்கள் வீதம் ஒரு ஆண்டுக்கு 80,000 திருக்குறள் நூல்களையும், ஐந்து ஆண்டுகளுக்கு மொத்தம் 4 லட்சம் நூல்களையும் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக வழங்க முன்வந்தது

உங்கள் மாவட்ட திருக்குறள் பரப்புரை தேவைகளுக்கு பொறுப்பேற்க திருக்குறள் புரவலர்களை அழைக்கிறோம்.

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் நன்கொடை பெறுவதில்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்த மாவட்டத்தை சார்ந்த திருக்குறள் முற்றோதல் பயிற்சியாளர் ஒருவரை அடையாளம் கண்டு அல்லது உருவாக்கி பகுதிநேர-முழுநேர திருக்குறள் பயிற்சி வழங்க ஊக்கத்தொகை, மாணவர்களுக்கு சான்றிதழ் அச்சடித்தல், "குறள் வழி" இதழுக்கு விளம்பரம் கொடுத்து இலவச இதழ்களை அனுப்ப உதவுதல் என்று சுயமாக உங்கள் மாவட்டத்தில் பொறுப்பேற்க அழைக்கிறோம். ஊர் கூடி பயணிக்கும் திருக்குறள் தேரை இழுக்க வடம் பிடிக்க வாருங்கள். எமக்கு அறம் சார்ந்த வணிகர்கள் அவர்கள் தொழில்களை விளம்பரம் செய்து உங்கள் மாவட்டத்தில் திருக்குறள் பரப்புரைக்கு உதவலாம்.

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் குறிக்கோள்கள்

1) தமிழ்நாடு அரசின் புதிய அறிவிப்பைத் (மாணவர் எண்ணிக்கை உச்ச வரம்பு ஏதுமில்லை, பரிசுத் தொகை உயர்வு) தொடர்ந்து, 1330 திருக்குறள் பாக்களையும் மனனம் செய்யும் மாணவர்களை அதிக அளவில் உருவாக்கி, அரசு விருதும், பரிசுத்தொகையும் பெற வைப்பது.

2) பள்ளித் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களுடன் இணைந்து செயல்பட்டு ஆர்வமும் மனனம் செய்யும் திறனும் மிக்க மாணவர்களை இனம் கண்டு, அவர்களுக்குத் திருக்குறள் மனனப் பயிற்சியை 3–ஆம் வகுப்பிலிருந்து 8–ஆம் வகுப்புக்குள் அளித்தல். அவர்களுக்கு அரசு விருது மட்டுமின்றி உலகத் திருக்குறள் இயக்கத்தின் சார்பாகத் "திருக்குறள் முற்றோதல் – இளநிலை" சான்றிதழ் வழங்குதல்.

3) முற்றோதல் முடித்த அனைவரும் கல்லூரி செல்வதற்கு முன்பு முழுமையாகக் குறளின் பொருளை அறிந்துகொள்ள வழிசெய்தல். அதில் நேர்முகத் தேர்வு வைத்து பொருள் உணர்ந்து கற்றவர்களுக்குத் "திருக்குறள் முற்றோதல்– முதுநிலை" சான்றிதழ் வழங்குதல்.

4) திருக்குறள் முற்றோதல் பயிற்றுவிக்க, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தகுதியும், அனுபவமும், ஆர்வமும் மிக்க முற்றோதல் முடித்த பயிற்சியாளர்களை அடையாளம் கண்டு பயிற்சியாளராக்கவும், அந்தப் பயிற்சியாளருக்கு மாதந்தோறும் ஊக்கத்தொகை வழங்க ஒரு புரவலரையும், மாவட்ட ஒருங்கிணைப்புப் பணிக்காக ஓர் ஒருங்கிணைப்பாளரையும் நியமித்தல்.

5) ஒவ்வொரு ஆண்டும் திருவள்ளுவர் நாளில் அந்தந்த மாவட்டங்களில் திருக்குறள் முற்றோதல் முடித்தவர்கள் அனைவரும் மாவட்டத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட திருவள்ளுவர் சிலையின் முன்பு ஒன்றுகூடி, தமிழ் வளர்ச்சித்துறை, மாவட்ட நிர்வாகம், பள்ளி, கல்லூரிகள், பொதுமக்கள் இணைந்து குழுவாக "திருக்குறள் முற்றோதல்" செய்து, கற்றதை மறந்துவிடாமல் இருக்க வழிசெய்தல்.

6) குறள் முற்றோதல் முடித்த அனைவரின் விவரங்களையும் இணையத்தில் பட்டியலிட்டு (https://www.valaitamil.com/mutrothal–students–register–list.php), வரிசை எண் கொடுத்து, அவர்கள் ஒருங்கிணைந்த வளர்ச்சியைப் பெற துணை நிற்றல்.

7) குறள் முற்றோதல் முடித்த அனைவரும் ஒருவருக்கொருவர் துணை நின்று உரிய கல்வி பெற்று மகிழ்ச்சியான, நிறைவான வாழ்க்கையை வாழவும், வேலைவாய்ப்பில், தொழிலில் வெற்றிபெறவும் முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு உரிய உதவிகளைப் பெறவும் துணைநிற்றல்.

8) திருக்குறள் முற்றோதல் முடித்த மாணவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் 5% முன்னுரிமை வழங்க கோரிக்கை வைத்து அதனை அடைய முயற்சி மேற்கொள்ளப்படும். தமிழ் அமைப்புகள் வழியே மாணவத் தூதர்களாக வெளிநாடு வாய்ப்புகளை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும்.

9) அனைத்து பள்ளிகளிலும் காலையில் திருக்குறள் மறையோதி தொடங்க அரசுக்கு பரிந்துரைத்து, அனைத்துத் தமிழ் நிகழ்வுகளிலும் திருக்குறள் மறையோதி நிகழ்ச்சியைத் தொடங்குவதை நடைமுறையில் கொண்டுவர முயற்சி செய்யப்படும்.

10) இதுவரை வெளிவந்துள்ள திருக்குறள் மொழிபெயர்ப்புகள், உரைநூல்கள் மட்டுமல்லாது, திருக்குறள் சார்ந்த அனைத்து விதமான நூல்களையும் தொகுத்து "உலகத் திருக்குறள் ஆராய்ச்சி நூலகம்" ஒன்றை உருவாக்கி, உலகின் திருக்குறள் நூல் என்றால் அங்கு இருக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும்.

www.Thirukkural.ValaiTamil.com | Kural.Mutrothal@gmail.com | குறள் வழி

Refer website for the latest update and use that content.

https://www.valaitamil.com/thirukkural–mutrothal–movement_20043.html

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம்

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 1330 திருக்குறள் இலவச மனனப் பயிற்சி

(வெற்றிகரமாக முடிக்கும் மாணவர்களுக்குப் பயிற்சி சான்றிதழும், அரசின் முற்றோதல் திட்டத்தில் பங்கேற்க வாய்ப்பும்)

மாவட்டப் பயிற்சியாளர்கள்

செங்கல்பட்டு

திருமதி. பி. கற்பகவள்ளி
+91 99525 73398

அரியலூர், புதுச்சேரி

திருமதி. சங்கீதா கண்ணன்
+91 78718 39331

திண்டுக்கல்

திரு. வெ.செல்வன்
+91 97884 25501

தஞ்சை

திருமதி. ச. ஆனந்தி
+91 96008 90134

காஞ்சிபுரம்

திரு. குறள் அமிழ்தன்
+91 93643 23915

காரைக்குடி

திரு. மெ.செயம்கொண்டான்
+91 9865 455036

நாமக்கல்

முனைவர். எ.திருமலை ராஜா
+91 9952 822535

செங்கல்பட்டு

திருமதி. செ.சிந்தாமணி
+91 95976 90745

அரியலூர்

திருமதி. சூரியகலா
+91 80985 79762

திண்டுக்கல்

திருமதி. பி. கௌரி பிரபாகரன்
+91 96008 90134

ஒருங்கிணைப்பாளர்கள்

திட்ட ஒருங்கிணைப்பு

திரு. ச. பார்த்தசாரதி
ஆசிரியர், வலைத்தமிழ்

அரசு மற்றும் பயிற்றுநர் ஒருங்கிணைப்பு

திரு. சி. இராஜேந்திரன், IRS (ஓய்வு),
ஒருங்கிணைப்பாளர், வள்ளுவர் குரல் குடும்பம்

அரசுப் பள்ளிகள் ஒருங்கிணைப்பு

திரு. இரவி சொக்கலிங்கம்,
நிறுவனர், S2S அறக்கட்டளை

புரவலர் ஒருங்கிணைப்பு

திரு. கொழந்தவேல் இராமசாமி
Washington DC, USA

திரு. க.செங்குட்டுவன்
திருக்குறள் ஆர்வலர்,
இந்தியா

திரு. செந்தில் துரைசாமி
திருக்குறள் ஆர்வலர்,
Texas,USA

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம்

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 1330 திருக்குறள் இலவச மனனப் பயிற்சி

(வெற்றிகரமாக முடிக்கும் மாணவர்களுக்குப் பயிற்சி சான்றிதழும், அரசின் முற்றோதல் திட்டத்தில் பங்கேற்க வாய்ப்பும்)

தலைமைப் பயிற்சியாளர்கள்

திருக்குறள் தூயர்
திரு. அ. கோபி சிங்
திருக்குறள் முற்றோதல் பயிற்றகம், தஞ்சாவூர்
+91 88385 11065

திரு. க. கோ. பழனி
திருவள்ளுவர் கல்வி மன்றம், சென்னை
+91 98944 59052

திருக்குறள்
திரு. க. காமராசு
உலகத் திருக்குறள் முற்றோதல் மையம், திருவண்ணாமலை
+91 63802 78863

கவிஞர் தமிழ்க்குழவி
திருக்குறள் வாழ்வியலாக்கப் பயிற்சி மையம், நாகர்கோவில்
+91 9442580620

திருக்குறள் நினைவாற்றலர்
த. தமிழ் மகிழ்நன்
இறை திருக்குறள் பயிற்றகம், திருக்கழுக்குன்றம்
+91 92802 53329

மாவட்டத்திற்கு 1000 திருக்குறள் நூல்கள் வீதம்
ஆண்டுக்கு 40000 திருக்குறள் நூல்களை
அடுத்த பத்து ஆண்டுகளுக்கு இலவசமாக வழங்குவோர்:
உலகத் தமிழ் வளர்ச்சி மன்றம், USA

பயிற்சி விவரங்களுக்கு

E-Mail: kural.mutrothal@gmail.com

Web: www.Thirukkural.ValaiTamil.com

WhatsApp: +91 73586 44673

முற்றோதல் முடித்தவர்கள் பதிவு செய்ய

www.ValaiTamil.com/mutrothal-students-register.php

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கத்தின் 2024 இலக்குகள்

- மாவட்டங்களில் பயிற்சிகளை விரிவாக்குதல். மாவட்டத்திற்கு 100 மாணவர்கள் முற்றோதல் பயிற்றுவிக்கும் இலக்கை நோக்கி நகர்தல்.
- தமிழ்நாடு அளவில் 124 என்ற தற்போதைய எண்ணிக்கையை குறைந்தது 1000 ஆக உயர்த்துதல்.
- குறள் வழி இதழை நிலைநிறுத்தி, பதிவு செய்தல்.
- மாவட்ட அளவில் புரவலர், பயிற்சியாளரை விரிவாக்குதல்.
- தொய்வு உள்ள சில மாவட்டங்களில் கவனம் செலுத்தி பலப்படுத்துதல்.
- முற்றோதல் ஆசிரியர் பயிற்சிக் கட்டமைப்பை உருவாக்குதல், பயிற்சியை தரப்படுத்தல்.
- 25 ஆண்டுகால 1200+ முற்றோதல் முடித்தவர்களை தொகுத்து மாவட்டம், பயிற்சியாளர், நாடு வாரியாக இணையத்தில் வெளியிடுதல்.
- முற்றோதல் முடித்தவர்களுக்கு அதிக வாய்ப்புகளை ஏற்படுத்தி முன்னுரிமை அளித்தல்.
- மாவட்ட அளவில் 2024 இறுதியில் திருவள்ளுவர் நாளில் மாவட்ட அளவில் குழுவாக முற்றோதல் செய்யவைத்தல்.
- திருக்குறள் ஆளுமைகளைத் தொகுத்து வெளியிடுதல்.
- 25 ஆண்டுகளாக முடித்தவர்களுக்கு முற்றோதல் இளநிலை சான்றிதழ் வழங்குதல்.
- முற்றோதல் – முதுநிலை நேர்முகத் தேர்வுக்கு பாடத்திட்டம் வரையறை செய்து பயிற்சிக் கையேடு வெளியிடுதல்.
- மாவட்ட அளவில் திருக்குறள் சார்ந்த ஆளுமைகள், ஆர்வலர்களை மாவட்டக் குழுவில் சேர்த்தல். அனைவரும் ஒருங்கிணைந்து
- குழுவாக கைகோர்த்து செயல்படுதல்.
- உலகத் தமிழ் வளர்ச்சி மன்றம், தமிழிருக்கைக் குழுவுடன் இணைந்து 80000 திருக்குறள் நூல்களை அரசுப்பள்ளி மாணவர்களுக்கு கொண்டுசேர்த்து பயிற்சியை வழங்குதல்.

திருக்குறள் தற்சார்பு : எங்கள் மாவட்டம்–எங்கள் பொறுப்பு

எங்கள் மாவட்ட மாணவர்களுக்கு, எங்கள் மாவட்டத்தில் படித்த ஒருவருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி பயிற்சியாளராக்கி, எங்கள் மாவட்டத்தில் அறம்சார் தொழில் செய்பவர்களைப் புரவலர்களாகக் கொண்டு, எங்கள் மாவட்ட வெளிநாடுவாழ் தமிழர்களின் துணையோடு திருக்குறள் முற்றோதல் பயிற்சியை வழங்கி, உயர்நெறியுடன் கூடிய மாணவர்களை உருவாக்குவோம். திருக்குறள் முற்றோதல் முடித்த மாணவர்களாக ஆண்டுக்கு நூறுபேரை உருவாக்கி எங்கள் மாவட்ட அரசு நிர்வாகத்துடன் இணைந்து தமிழ்நாடு அரசு வழங்கும் ரூபாய் 15000 விருதையும், முற்றோதல் சாதனை சான்றிதழையும் பெற உழைப்பது நமது இலக்காகும். திருக்குறள் கற்றுத்தேர்ந்து இளநிலை மனப்பாடம், முதுநிலை பொருள் உணர்தல் என்று இருநிலைகளைக் கடந்த மாணவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு, தொழில்வாய்ப்பு, வெளிநாட்டு வாய்ப்புகள் என்று பல்வேறு வாய்ப்புகளை ஏற்படுத்தி, திருக்குறளை முழுதும் படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்குவோம். அரசு பெரும்தொகை பரிசு வழங்கினாலும் திருக்குறள் கற்க முன்வராத நிலையை மாற்றுவோம்

அன்பார்ந்த தமிழ்நாடு வாழ், வெளிநாடுவாழ் அன்பர்களே.. தமிழ்நாட்டில் ஆகச்சிறந்த ஒரு செயலை செய்யவேண்டுமானால் அது தனிமனித மாற்றம்தான். அவர்களை நற்சிந்தனையுடன், சமூகப்பொறுப்புடன் உருவாக்கிவிட்டால் அவர்கள் தாங்கள் பிறந்த ஊரை, மாவட்டத்தை, மாநிலத்தை, நாட்டை பெருமைகொள்ளச் செய்வார்கள். எனவே சமூக அக்கறைகொண்ட உங்களை உங்கள் மாவட்டத்தில் திருக்குறள் படித்த மாணவர்கள் உருவாக, முற்றோதல் ஆசிரியர்கள் உருவாக அன்புடன் அழைக்கிறோம்

ஏற்கனவே பொறுப்பேற்றுள்ள புரவலர்களுக்கு நன்றி...!! நன்றி.. !!

உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் நன்கொடை பெறுவதில்லை. செயல்பாடுகளை கண்டறிந்து அறம் சார்ந்த மனிதர்கள், நிறுவனங்கள் அந்தந்த மாவட்டத்திலிருந்து அவர்கள் சார்ந்த மாவட்டத்தின் புரவலர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குதல், பரிசளித்தல், பகுதிநேர, முழுநேர திருக்குறள் முற்றோதல் பயிற்சியாளர்களுக்கு ஊக்கத்தொகையை நேரடியாக வழங்குதல் உள்ளிட்டவற்றிற்கு அந்தந்த மாவட்டத்தை சார்ந்தவர்கள் பொறுப்பேற்றுக்கொள்ளுங்கள்.

Mayiladuthurai
மயிலாடுதுறை

திரு. ஜெனிபர் பவுள்ராஜ்

Chengalpattu
செங்கல்பட்டு

திரு. மணி பெரியகருப்பன்,
ஓகாயோ , அமெரிக்கா

Salem
சேலம்

முனைவர். தங்கராசு பெரியசாமி

Karur
கரூர்

திரு. க. செங்குட்டுவன்,
தாளாளர்
Valluvar Science & Management College

Thiruvarur
திருவாரூர்

திரு. இளங்கோ,
சிங்கப்பூர்

Pondicherry
புதுச்சேரி



முனைவர். வி. முத்து
தலைவர்,
புதுவைத் தமிழ்ச்சங்கம்

Dindigul
திண்டுக்கல்

திரு. பாஸ்கர் குமரேசன்,
வெர்சீனியா, அமெரிக்கா

Thanjavur
தஞ்சாவூர்

திரு. வீ. இளவழுதி,
வெர்சீனியா, அமெரிக்கா

பிற தேவைகள் உள்ள மாவட்டங்கள்: அரியலூர், ஈரோடு, உதகமண்டலம், கடலூர், கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், சிவகங்கை, செங்கல்பட்டு, சென்னை, தர்மபுரி, திருச்சி, திருநெல்வேலி, திருப்பத்தூர், திருப்பூர், திருவண்ணாமலை, திருவள்ளூர், தூத்துக்குடி, தென்காசி, தேனி, நாகப்பட்டினம், நாகர்கோயில், புதுக்கோட்டை, பெரம்பலூர், மதுரை, ராணிப்பேட்டை, ராமநாதபுரம், விருதுநகர், விழுப்புரம், வேலூர்

தஞ்சாவூர் மாவட்டம்

தஞ்சை மாவட்ட திருக்குறள் முற்றோதல் பயிற்றகத்தின் மாணவர்கள் திருச்சி திருமூலநாதன் அறக்கட்டளை நிகழ்வில் பங்கேற்றபோது.



திருச்சியில் திருக்குறள் திருமூலநாதன் அறக்கட்டளை நடத்திய திருக்குறள் முற்றோதல் போட்டியில் கலந்துகொண்ட, கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவ–மாணவியருக்கு வாழ்த்துகள்..

தஞ்சாவூரிலிருந்து மாணவர்களை பயிற்சியளித்து அழைத்துச்சென்று வழிகாட்டிய தலைமைப்பயிற்சியாளர் திருக்குறள்தூயர் திரு.கோபிசிங் ஐயா அவர்களுக்கும், தஞ்சை மாவட்ட திருக்குறள் முற்றோதல் பயிற்சியாளர் திருமதி. ஆனந்தி அவர்களுக்கும் பாராட்டுகளும்.. வாழ்த்துகளும்.

விருதுநகர் மாவட்டம்

300க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கான சிறப்பு கோடைகால திருக்குறள் பயிற்சி முகாம் நடைபெற்றது.

விருதுநகர் மாவட்டத்தில் அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கான சிறப்பு கோடைகால உண்டு –உறைவிட திருக்குறள் பயிற்சி முகாம் நடைபெற்றது.

இது மாவட்ட ஆட்சியர் திரு. வீ.ப.ஜெயசீலன் இ.ஆ.ப., வழிகாட்டுதலில் நடைபெற்றது.

திரு ஆனந்தகுமார், இ.ஆ.ப. கலந்து கொண்டு, உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் வழங்கிய திருக்குறள் நூல்களை மாணவர்களுக்கு வழங்கினார். மற்ற மாவட்டங்களும் இதைப் போன்ற திருக்குறள் சார்ந்த கோடைக்கால சிறப்பு முகாம்கள் நடத்த வேண்டும் என்று வள்ளுவர் குரல் குடும்பம் மற்றும் உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் சார்பாக வேண்டுகோள் வைக்கப் படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டம்

கன்னியாகுமரி திருவள்ளுவர் அறக்கட்டளை சார்பில் குமரி வரலாற்றுக் கூடத்தில் நடைபெற்ற 18 ஆம் ஆண்டுத் திருக்குறள் திருவிழாவில் புதுச்சேரி அறிஞர் ந. மு. தமிழ்மணி அவர்கள் எழுதிய "தக்கார் தகவிலார் ", "பசிப்பும் புசிப்பும்" ஆகிய திருக்குறள் தொடர்பான நூல்கள் வெளியிடப்பட்டன.

தென்காசி மாவட்டம்

தென்காசி திருவள்ளுவர் கழக விழா 2024

தென்காசி திருவள்ளுவர் கழகம் 97 வது நிறைவு ஆண்டு விழா 24/05/24 முதல் 27/05/24 வரை விழா நடைபெற்றது

ஆதி பகவன் துணை
நூற்றாண்டை நோக்கி ...
தோற்றம் 1927
திருவள்ளுவர் கழகம், தென்காசி.

திருக்குறள் அன்பர்களே,

வணக்கம். நூற்றாண்டை நோக்கிச் செல்லும் தென்காசித் திருவள்ளுவர் கழகத்தின் 97-ஆவது ஆண்டு நிறைவுத் திருக்குறள் விழாவில் அன்பர்கள் ஆர்வமுடன் அறப்பணியில் பங்குகொண்டு சிறப்பிக்கப் பணிவுடன் வேண்டிக் கொள்கிறோம்.

நன்கொடையினை கீழ்க்கண்ட வங்கிக் கணக்கு மூலமாகவோ அல்லது **QR Code** மூலமாகவோ செலுத்தி, தாங்கள் பணம் செலுத்திய விவரத்தை கீழ்கண்ட தொலைபேசி எண்களில் தகவல் தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

A/c. No.	: 6585726431
A/c. Name	: Thiruvalluvar Kazhagam,Tenkasi.
Bank Name	: Indian Bank, Tenkasi.
IFSC	: IDIB000T009

இராம. தீத்தாரப்பன், செயலர் - **94430 86864**
வ. சந்திரசேகரன், பொருளாளர் - **94864 81383**

2055 வைகாசி 11, வெள்ளி **24-5-2024** காலை 5-45 மணி முதல் பகல் 1-00 மணி வரை

காலை 5-45 மணி முதல்	:	திருக்குறள் முற்றோதுதல் வேள்வி
முன்னிலை	:	''திருக்குறட்செல்வர்'', திரு. **ஸ்ரீ.எம்.எஸ். இலக்குமணன்,** துணைத்தலைவர்.
காலை 8-00 மணி	:	திருக்குறள் கொடியேற்றுதல் - திரு. **இரா. முருகன்** செயல் அலுவலர், அருள்மிகு காசிவிசுவநாதர் திருக்கோயில், தென்காசி.
மங்கல இசை	:	திரு. **முத்துசுவாமி குழுவினர்**
காலை 8-30 மணி முதல்	:	தமிழ் மறை முழக்கம் - நகர்வலம்.
தொடக்கி வைப்பவர்	:	''தியாகச்செம்மல்'', திரு. **கி. இலக்குமிகாந்தன் பாரதி,** இ.ஆ.ப.,
முன்னிலை	:	''வாழும் வள்ளுவர்''. பாவலர், திரு. **சுப்பன்**
காலை 9-30 மணி முதல்	:	திருக்குறள் பண்ணிசை : 'இசைச்செல்வர்' திரு. **இரா. நரேந்திரக்குமார்**

காலை 10-00 மணி முதல் 1-00 மணி வரை **விழா மங்கலம்**

தலைமை	:	திரு. **இராம. தீத்தாரப்பன்,** செயலர், திருவள்ளுவர் கழகம், தென்காசி.
வரவேற்புரை	:	வழக்குரைஞர். திரு. **ந. கனகசபாபதி,** தலைவர், திருவள்ளுவர் கழகம், தென்காசி.
வாழ்த்துரை	:	பொறியாளர், திரு. **சோம. முத்துசுவாமி,** இலஞ்சி.
முன்னிலை	:	திரு. **மா. சங்கிலி ரத்தினம்,** வடகரை.

தலைப்பு : **இனம் காட்டும் இசைபெறு குறளில் இவர்களைச் சந்திப்போம்**

ஒளவிய நெஞ்சத்தான்	- திருக்குறள் திரு. **சி.க. சாமி**	மடியிலா மன்னவன்	- திருக்குறள் திரு. **ஆ. சதாசிவம்**
நெஞ்சில் துணிவார்	- திருக்குறள் திரு. **இல. வீரபத்திரன்**	பழுதெண்ணும் மந்திரி	- திருக்குறள் திருமதி **சூடலட்சுமி**
உளரென்னும் மாத்திரைய	- திருக்குறள் திரு. **இரா. கிருஷ்ணன்**	கற்றாருள் கற்றார்	- திருக்குறள் திரு. **தெ.க. கிருஷ்ணமூர்த்தி**
அளவிறந்து வாழாதான்	- திருக்குறள் திரு. **ர.வ. கணேசன்**	சுங்கை விதிரார்	- திருக்குறள் திரு. **தி. செல்லம்**
உள்ளம் இலாதவர்	- திருக்குறள் திரு. **ம.சோ. வேலாயுதம்**	குடிப்பிறந்தார்	- திருக்குறள் திரு. **சோம. இளங்கோவன்**

நன்றியுரை : திரு. **வ. சந்திரசேகரன்,** பொருளாளர், திருவள்ளுவர் கழகம், தென்காசி.

2



ஆதிபகவன் துணை
அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு - தமிழ் மறை 1.
தெய்வப்புலவர் திருவள்ளுவர் பெருமானின் திருநாள் -
இக்கழகத்தின் 97-ஆவது ஆண்டு நிறைவுத் திருக்குறள் விழா

நாளிது

(தி.பி.) 2055	வைகாசி	11	12	13	14
		வெள்ளி	சனி	ஞாயிறு	திங்கள்
(கி.பி.) 2024	மே	24	25	26	27

ஆகிய நான்கு நாட்களும் சிறந்த முறையில் நிகழவிருக்கின்றது. கற்றுத்துறைபோகிய சான்றோர் பெருமக்கள் பலர் இவ்விழாவில் பங்குபெற அன்புடன் இசைந்துள்ளார்கள். அன்பர்கள் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்கப் பணிவன்புடன் வேண்டுகிறோம்.

வழக்குரைஞர். **ந. கனகசபாபதி**
தலைவர்
க.சோ. கல்யாணி சிவகாமிநாதன்
ஆ. சங்கரன்
ஸ்ரீ.எம்.எஸ். இலக்குமணன்
துணைத் தலைவர்கள்
வ. சந்திரசேகரன்
பொருளாளர்

துரை. தம்புராஜ்
மதிப்புறு
தலைவர்

இராம. தீத்தாரப்பன்
செயலர்
இரா. குத்தாலிங்கம்
இணைச் செயலர்
இல. வீரபத்திரன்
இரா. கிருஷ்ணன்
மா. சுப்பசுவாமி
ச. வேங்கடகிரிமணியன்
துணைச் செயலர்கள்

1



2055 வைகாசி 11, வெள்ளி **24-5-2024** மாலை 5-30 மணி முதல் இரவு 9-00 மணி வரை

திருக்குறட் பேரவை

தலைவர்	:	பேரா. முனைவர். திரு. **தெ. ஞானசுந்தரம்**
வரவேற்புரை	:	வழக்குரைஞர். திரு. **ந. கனகசபாபதி,** தலைவர்.
வாழ்த்துரை	:	''தியாகச்செம்மல்'' திரு. **கி. இலக்குமிகாந்தன் பாரதி,** இ.ஆ.ப..
முன்னிலை	:	''பைந்தமிழ்ப் பண்பாளர்'' திரு. **துரை தம்புராஜ்,** மதிப்புறு தலைவர்.

தலைப்பு : **இம்மை மறுமைக்கு அருமருந்தான திருக்குறளில் ...**

அறம்	:	''தேனருவித் தென்றல்'' பேரா. திரு. **எம். இராமச்சந்திரன்**
பொருள்	:	புலவர். திரு. **கா.ச. பழநியப்பன்**
இன்பம்	:	''இலக்கிய மாமணி'' பேரா. திரு. **அரங்க. இராமலிங்கம்**

நன்றியுரை : திரு. **வ. சந்திரசேகரன்,** பொருளாளர், திருவள்ளுவர் கழகம், தென்காசி.

3

ஆதிபகவன் துணை
நூற்றாண்டை நோக்கி ...
திருவள்ளுவர் கழகம், தென்காசி.
தோற்றம் 1927
97-ஆவது ஆண்டுத் திருக்குறள் விழா
24-05-2024 முதல் 27-05-2024 முடிய நான்கு நாட்கள்
தினமும் : காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை. மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை
24-05-2024 வெள்ளி
காலை 10 மணி முதல் : திருவள்ளுவர் கழக அன்பர்கள் பங்கு கொள்ளும் விழா மங்கலம்
மாலை 5-30 மணி முதல் : திருக்குறட் பேரவை
தலைவர் : பேரா. முனைவர். திரு. தெ. ஞானசுந்தரம்
தலைப்பு : இம்மை மறுமைக்கு அருமருந்தான திருக்குறளில் ...
அறம் : ''தேனருவித் தென்றல்'' பேரா. திரு. எம். இராமச்சந்திரன்
பொருள் : புலவர். திரு. கா.ச. பழநியப்பன்
இன்பம் : ''இலக்கிய மாமணி'' பேரா. திரு. அரங்க. இராமலிங்கம்
25-05-2024 சனி
காலை 10 மணி முதல் : கவி முற்றம் : 9 கவிஞர்கள் பங்குபெறுகிறார்கள்
தலைமை : கவிஞர். பேரா. முனைவர். திருமதி. க. சுப்புலெட்சுமி
மாலை 5-30 மணி முதல் : ஆய்வரங்கம்
தலைவர் : மாண்புமிகு. நீதியரசர். திரு. ஆர். சுரேஷ்குமார் உயர் நீதிமன்றம், சென்னை.
தொடக்கவுரை:''செல்வேந்தர்'' திரு. கி. வைத்தியநாதன், ஆசிரியர், தினமணி.
கம்பரும் திருவள்ளுவரும் : பேரா. திரு. தெ. ஞானசுந்தரம்
வள்ளுவம் - ஒரு எழுதில்லை மாடம் : ''குறள் நெறிக்குரிசில்'' திரு. சி. இராஜேந்திரன், I.R.S.,
26-05-2024 ஞாயிறு
காலை 9-30 மணி முதல் : புதியதோர் உலகம் செய்வோம் : வள்ளுவர் தூர் குடும்ப அரங்கம்
தலைமை : ''இலக்கிய மாமணி'' பேரா. திரு. அரங்க இராமலிங்கம்
மாலை 5-30 மணி முதல் : பட்டி மண்டபம்
தலைவர் : திரு. க.சோ. கல்யாணி சிவகாமிநாதன், துணைத்தலைவர்.
தலைப்பு : திருக்குறளில் பொதிந்து கிடப்பது குடியியல் சிந்தனையா ! பொருளியல் சிந்தனையா !
இரவு 8-00 மணி முதல் : சிறப்புப் பேருரை
குன்றக்குடி மகா சந்நிதானம். தவத்திரு. குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், குன்றக்குடி ஆதீனம்.
27-05-2024 திங்கள்
காலை 10-00 மணி முதல் : மாணவர் அரங்கம் :
மாலை 5-30 மணி முதல் : கருத்தரங்கம் தலைமை : பாடகர் திரு. ஒளவை அருள்
இரவு 8-00 மணி முதல் : விழா நிறைவுப் பேருரை
மாண்புமிகு நீதியரசர் ஜி.ஆர். சுவாமிநாதன் உயர்நீதிமன்றம், சென்னை.
அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம் ...
இவண் : திருவள்ளுவர் கழகத்தார், தென்காசி.

சேலம் மாவட்டம்

சேலம் மாவட்ட எழுத்தாளர்களோடு இணைந்து ஒருங்கினைக்கும், சேலம் மாவட்ட எழுத்தாளர்களுக்கான, திருக்குறள் கதைகள் புத்தகத் திறனாய்வு விழா, மெய்யுணர்தல் அதிகாரத்திற்கான "மெய்பொருள் அறிக" என்ற நாடக அரங்கேற்றம், மற்றும் அரியலூர் கலைமணி கலைக்குழுவினரின், நாட்டுப்புற நடனம் மற்றும் வேத மாரியம்மன் ஒயில் கும்மி குழுவினரின் கும்மி நடனம் மற்றும் நாடகம் நடைபெற்றது.

இனிதே நடைபெற்ற முப்பெரும் விழா

சேலம் மாவட்ட எழுத்தாளர்களின் திருக்குறள் புத்தக திறனாய்வு விழா, மெய்யுணர்தல் அதிகாரத்திற்கான திருக்குறள் நாடக அரங்கேற்ற விழா மற்றும் அரியலூர் கலைமணி கலைக்குழுவினரின் தமிழக பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள், வேத மாரியம்மன் ஒயில் கும்மி குழுவினரின் கலை நிகழ்ச்சிகள்

சென்னை மாவட்டம்

கேளம்பாக்கம் திருக்குறள் குழந்தைகள்

1–5–2024 அன்று திருச்சி சேவா சங்கம் பள்ளியில் திருமூலநாதன் அறக்கட்டளையின் சார்பாக நடைபெற்ற மாநில அளவிலான திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற

கேளம்பாக்கம் திருக்குறள் குழந்தைகள்
யாசிகா, நித்யஸ்ரீ, தன்யஸ்ரீ
மூவருக்கும் வாழ்த்துகள்

7:00 am

7:01 am

10th Std
12th Std
7:01 am

திருக்குறள் நிகழ்வுகள்

சித்திரைத் திருநாளை முன்னிட்டு அமீரகத்தில் 2வது ஆண்டாக யாழ் கல்வியகம் நடத்திய திருக்குறள் திருவிழாவின் ஒருங்கிணைப்பாளர்களுக்கும், தன்னார்வலர்களுக்கும், பங்கு பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் வாழ்த்துகளும், பாராட்டுகளும்.

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம்
Tamil Sangam of Greater Washington (Inc.)
(A registered, Non-Profit, Tax Exempt 501(c) (3) Organization)
நூல்நயம் – குழு
(புத்தகம் படித்துப் பகிர்வோம்)
இணைந்து வழங்கும்
திருக்குறள் கருத்தரங்கம்
வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று - குறள்
(The life that cherishes strangers each day Never falls upon ruin)
சிறப்பு விருந்தினர்
தாமஸ் ஹிடோஷி ப்ரூக்ஸ்மா
கலந்துரையாடல்
திருக்குறள் சார்ந்த சிற்றுரைகள், பதாகைகள், கதைகள், இசைப்பாடல்கள், வீடியோ விளையாட்டுகள், சின்னஞ்சிறு நாடகங்கள், கவிதைகள் ஓவியங்கள், மற்றும் பலவகை ஆக்கங்கள்
Date: June 2nd 2024, Time: 11.30 AM to 5:30 PM
Venue: Walter Johnson Highschool, Bethesda
11.30 முதல் 12.30 வரை உணவு வழங்கப்படும்.
THE KURAL
பங்குபெறும் பிள்ளைகளுக்கு சிறப்புப் பரிசுகள்
திரு. தாமஸ் ஹிதோஷி ப்ருக்சிமா அவர்கள்
கையெழுத்துடன் அவரின் நூல்கள்
www.washingtontamilsangam.org
இது நமது தமிழ்ச்சங்கம்! நாம் அனைவரும் அதன் அங்கம்!!
tsgwdc | tsgwdc TamilSangamGW www.tsgwdc.org

திருக்குறள் இன்னும் உலக அலுவல் மொழிகளில் எத்தனை மொழிகளில் மொழிபெயர்க்கப்படவேண்டும்?





உலக மொழிகளில் திருக்குறள் தொகுப்புத் திட்டத்தின் முதல் பகுதி (Nov 2018 – Mar 2024) முடிந்து இரண்டாம் பகுதி "திருக்குறள் 2030" தொடங்குகிறது.

முதல் பகுதியில் இக்குழு என்ன செய்து முடித்துள்ளது?

1) திருக்குறள் மொழிபெயர்ப்பு விவரங்களை முழுமையாகத் தொகுத்து மொழிபெயர்ப்பு வரலாற்றுத் தரவுகளை உறுதிசெய்தல்.

2) அச்சுப்பிரதிகளை உலக நாடுகளிலிருந்து சென்னைக்கு வரவழைத்துத் தொகுத்தல்.

3) அனைத்து விவரங்களையும் அச்சிட்டு நூலாக வெளியிடுதல். ஒவ்வொரு ஆண்டும் புதிய மொழிபெயர்ப்பு விவரங்களை சேர்த்து தொடர்ந்து இந்நூலை நம்பமாக, ஒருங்கிணைந்த ஆய்வு அடங்கலாக வெளியிடுதல்.

இரண்டாம் பகுதியில் உலகத் தமிழர்கள் என்ன செய்யவிருக்கிறோம்?

>> நீங்கள் வசிக்கும் நாட்டின் மொழியில் திருக்குறள் மொழிபெயர்ப்பு உள்ளதா? – அதை பரவலாக்க, பயன்பாட்டுக்குக் கொண்டுவர என்ன செய்யவேண்டும் என்று சிந்திப்போம்.

>> நீங்கள் வசிக்கும் நாட்டின் மொழியில் திருக்குறள் மொழிபெயர்ப்பு இல்லையா, மொழிபெயர்க்க என்ன செய்யவேண்டும்? சிந்திப்போம்.

உங்கள் நாடுகளில் இதுகுறித்து எங்களோடு சேர்ந்து சிந்திக்க தொடர்புகொள்க.

நாம் இன்னும் மொழிபெயர்க்கவேண்டிய உலக நாடுகளின் அலுவல் மொழிகளின் எண்ணிக்கை: 158

முழுவிவரங்களும் இடம்பெற்றுள்ள "Thirukkural Translations in World Languages" நூலைப்பெற https://estore.valaitamil.com

அமீரகத்தில் (UAE) “Thirukkural Translations in World Languages” நூல் வெளியிடப்பட்டது.

அமீரகத்தில் (UAE) கடந்த 5 ஆண்டுகளாக தமிழ் கற்பிக்கும் யாழ் கல்வியகம் சார்பில் நடத்தப்பட்ட திருக்குறள் திருவிழா நிகழ்வில் "Thirukkural Translations in World Languages" என்ற உலக மொழிகளில் திருக்குறள் திகுப்புத்திட்டத்தின் ஆய்வரிக்கையாக வெளிவந்துள்ள ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள 212 பக்கங்களைக் கொண்ட ஆய்வு அடங்கல் நூல் வெளியிடப்பட்டது.

நிகழ்ச்சியில் சுமார் 270 குழந்தைகள் கலந்துகொண்டு திருக்குறள் சொல்லி ஒரு குறளுக்கு ஒரு திர்ஹாம் வீதம் பரிசு பெற்றனர்.

இந்நிகழ்வில் யாழ் கல்வியகத்தின் ஆலோசகர் திரு. நாகப்பன், அமீரக எழுத்தாளர் திரு. கலைஞன் நாஷ், ஸ்மார்ட் கேஸ் நிறுவனத்தின் தலைவர் திரு. முத்துக்குமார், அமீரக எழுத்தாளர் திருமதி. இரமாமலர் மற்றும் யாழ் கல்வியகத்தின் நிறுவனர் திரு. தவச்செல்வம் ஆகியோர் இணைந்து இந்நூலை வெளியிட்டனர்.

முன்னதாக வலைத்தமிழ் நிறுவனர் திரு. ச.பார்த்தசாரதி அவர்கள் நூலாசிரியர் குழுவின் சார்பாக வழங்கிய வாழ்த்துச் செய்தி மற்றும் இந்நூலைப் பற்றிய பல அரிய தகவல்கள் அடங்கிய காணொளி ஒளிபரப்பப்பட்டது.

அமீரகத்தில் இந்நூலை வெளியிட்ட யாழ் கல்வியகம் மற்றும் அதன் நிறுவனர் யாழ் நிறுவனர் திரு. தவச்செல்வம் அவர்களுக்கு நூலாசிரியர் குழு நன்றி தெரிவித்துள்ளது.

நூலைப்பெற: https://estore.valaitamil.com/

குறிப்பு: உலக நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகள், சங்கங்கள் உங்கள் நாடுகளில், மாநிலத்தில் இந்நூலை வெளியிட்டு அறிமுக விழா நடத்தி உலகப்பொதுமறை மொழிபெயர்ப்பு நூல்கள் இருப்பதை பரப்புவதும், பயன்பாட்டில் கொண்டுவருவதும், இல்லாத மொழிகளில் மொழிபெயர்க்க முயற்சி எடுப்பதற்கும் துணைநிற்க அழைப்பு விடுக்கப்பட்டது.

நேரம்
மாலை 3:00
முதல் 8:00 மணி
வரை
வாருங்கள்

மாலை 3:00
முதல் 8:00 மணி
வரை
வாருங்கள்
Ajey Kumar Selvan

நவில்தொறும் நூல்நயம்



திருக்குறள் 2030 – பகுதி 2

திருக்குறள் 2030 - Phase II
4
• திருக்குறளில் மீதம் உள்ள 158 மொழிகளில் மொழிபெயர்ப்பை கொண்டுவர அரசு, தனியார் அமைப்புகளிடம் ஒருங்கிணைப்பு செய்தல்.
5
• அச்சில் இல்லாத, எளிதில் தமிழ்நாட்டிலும், குறிப்பிட்ட மொழி பேசும் நாட்டிலும் கிடைக்காத நூல்களை ஆராய்ந்து , ஒருங்கிணைத்து மறுபதிப்பு செய்தல்
6
• திருக்குறள் சார்ந்த அனைத்து மொழிபெயர்ப்புகளையும் ஒரே இடத்தில் கிடைக்கச்செய்தல்
7
• சுற்றுலாப் பயணிகள் அதிகம் செல்லும் இடங்களில் திருக்குறள் சார்ந்த நூல்கள் கிடைக்க வழிவகை செய்தல்.
8
• திருக்குறள் மொழிபெயர்ப்புகளை பரிசுப்பொருளாக அனைத்து மாநிலங்களும், தூதரகங்களும் பயன்படுத்த வழிவகை செய்தல்.
9
• தேசிய நூலாக இந்தியாவும், "Heritage book of Mankind " என்று யுனெஸ்கோவும் அங்கீகரிக்க குழு அமைத்து ஒருங்கிணைத்தல்

தேடப்படும் திருக்குறள் அச்சு நூல்கள்



திருக்குறள் முற்றோதல் முடித்தவர்கள்

மாணவர் பெயர் | நாடு: Select | மாநிலம்: Select | SEARCH

பதிவு செய்ய

#	மாணவர் எண்	பெயர்	நாடு	மாநிலம்	மாவட்டம்	ஆண்டு
1.	331	ச.கோபிகா	India	Tamil Nadu	tiruchirappalli	2022
2.	330	மு. நிஷார்னியா	India	Tamil Nadu	thanjavur	2022
3.	329	க. சந்தான லட்சுமி	India	Tamil Nadu	kanyakumari	2022
4.	328	சு.சுசாந்திகா	India	Tamil Nadu	viluppuram	2015
5.	327	சு.சுசாந்திகா	India	Tamil Nadu	viluppuram	2015
6.	326	ர. செஞ்சோலை	India	Tamil Nadu	viluppuram	2022
7.	325	ஸ்ரீ .ஸ்ரீ வர்ஷன்	India	Tamil Nadu	nagapattinam	2022
8.	324	சீ. யாழ்த்தமிழ்	India	Tamil Nadu	viluppuram	2022
9.	323	டே.ஜான் டேவிட்	India	Tamil Nadu	kanyakumari	2022
10.	322	இரா.ராஜ்குமார்	India	Tamil Nadu	theni	2015

இதுவரை உலக அளவில் திருக்குறளை முழுமையாகப் படித்து முற்றோதல் செய்துள்ளவர்கள் யார்? ஆவணப்படுத்த புதிய இணையதளம்..

2000 வது ஆண்டில் திருக்குறள் முற்றோதல் செய்யும் மாணவர்களுக்கு பரிசுத் தொகை வழங்கும் திட்டத்தை அரசு தொடங்கியது. கடந்த 23 ஆண்டுகளில் தமிழ்நாடு முழுதும் சுமார் 812 பேர் 1330 திருக்குறளையும் கூறி பரிசு பெற்றுள்ளார்கள் என்று தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர்.அவ்வை அருள் தெரிவித்துள்ளார். 14.04.1972 முதல் இயங்கிவரும் திருச்சி திருமூலநாதன் அறக்கட்டளை 01.05.1998 முதல் 26 ஆண்டுகளாக திருக்குறள் ஒப்பிடுதல் போட்டியை நடத்திவருகிறது. அவர்கள் வழங்கும் 2000 ருபாய் பரிசைப் பெற்றவர்கள் 400 பேருக்கு மேல் உள்ளனர். இதுபோல் வேறு அமைப்புகளும் செய்துகொண்டிருக்கலாம். அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளில் முற்றோதல் செய்தவர்கள் பலர் உள்ளனர்.

இவர்களை ஒரு குழுமமாக தொகுத்து வெளியிடுவதும், இவர்களுக்கு அனைத்திலும் தமிழ்ச்சமூகம் கல்வி, வேலைவாய்ப்பு, மேடைவாய்ப்பு, பொருளாதார வாய்ப்பு, தொழில் உள்ளிட்ட அனைத்திலும் முன்னுரிமை வழங்கவும் உலகத் திருக்குறள் முற்றோதல் இயக்கம் ஒரு சிறப்பு இணையதள வசதியை ஏற்படுத்தி ஆவணப்படுத்தி வெளியிடுகிறது. உங்களுக்குத் தெரிந்தவர்களை பதிவு செய்ய இங்கு செய்யவும்.

முதல்கட்டமாக இவர்கள் அனைவர்க்கும் உலகத்திருக்குறள் முற்றோதல் இயக்கம் சார்பில் திருக்குறள்-இளநிலை சான்றிதழ் வழங்கி, பொருள் உணர்ந்து படித்துள்ளவர்களை அடையாளம் கண்டு திருக்குறள்-முதுநிலை சான்றிதழ் வழங்கவிருக்கிறோம். இளநிலை முடித்தவர்கள் , முதுநிலை படிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

https://www.valaitamil.com/mutrothal-students-register-list.php

or www.Thirukkural.ValaiTamil.com

சிற்றினம் சேராமை!

கவிமாமணி இரஜகை நிலவன், மும்பை

சிற்றினம் சேராமை என்பது சிறிய இனத்தைக் குறிப்பதை விட அவர் சொல்லும் மொழியிலே தாழ்ந்த குணங்களைக் கொண்ட சிறிய குழுவினருடன் இணையும் ஒரு மாண்புடைய மனிதன் பன்றியோடு சேர்ந்த கன்றுக்கே ஒப்பாவான் என்பதை வள்ளுவர் மிகத் தெளிவாக குறிப்பிடுகிறார்.

மாந்தர்கள் எப்போதுமே உயரிய கொள்கைகளோடும் உயிரிய கலாச்சாரங்களோடு வாழ வேண்டும் என்பதே வள்ளுவரின் மிகப்பெரிய நோக்கமாக இருந்திருக்கிறது.வள்ளுவனார் சிறிய அல்லது தாழ்ந்த குணம் கொண்ட கெட்ட குணமுடைய மாந்தரோடு இணைவது எவ்வளவு மோசமான செயல்

அது எவ்வாறு, ஒரு மனிதனை தரைமட்டத்திற்கு இழுத்துச் செல்கிறது. அவனுடைய வாழ்க்கை பாதையை எவ்வளவு மோசமாக.... தரம் கெட்டதாக மாற்றி அமைக்கிறது என்பதை தன்னுடைய இந்த பத்து குறள்களிலும் மிக அழகாக எடுத்துக் கூறுகிறார்.

வள்ளுவன் தன்னை உலகிற்கு தந்து வான் புகழ் கொண்ட இந்த தமிழ்நாட்டிலே அந்த திருக்குறளின் வடிவத்தில் அவர் குறிப்பிடுகின்ற சிற்றினம் சேராமை என்னும் இந்த அதிகாரத்திலே தாழ்ந்த மக்களோடு (தாழ்ந்த மக்கள் என்றால் தரம் கெட்ட குணத்தோடு இருக்கின்ற மக்களோடு) மனிதர்கள் எப்பொழுதுமே இணையக் கூடாது என்பதே அவர் இந்த காப்பியத்தில் அழகாக பத்து குறள்களிலும் மிக வடிவமாக குறிப்பிடுகிறார்.

வள்ளுவர் 1330 குறளிலும் பல கருத்துக்களை மிக அழகாக குறிப்பிட்ட போதிலும் இந்த சிறி சேராமை என்ற அதிகாரத்தில் மனிதநேயம் எவ்வாறு வாழ வேண்டும் என்றும், எத்தகைய குணங்களோடு இருக்க வேண்டும் என்றும்,

எத்தகைய குணங்களோடு இருப்பவரோடு சேர வேண்டும் என்பதை மிகவும் தெள்ளத் தெளிவாக குறிப்பிடுகிறார்.

உலகப் பொதுமறையாம் திருவள்ளுவரின் திருக்குறளில் சிற்றினம் சேராமை அதிகாரத்தில் வள்ளுவர் இவ்வுலகில் மனித குலத்தில் மாண்புகளை எவ்வாறு எடுத்துரைக்கிறார் என்பது இந்த கட்டுரையின் நோக்கம்

<u>முன்னுரை:</u>

இந்த சிற்றினம் சேராமை என்ற அதிகாரத்திலே வள்ளுவர் சேற்றோடு சேர்ந்து மழை நீரும் சேறாகி விடுவது போல மேன்மக்கள் தாழ்ந்த குணத்தாரோடு சேரும்போது, அவர்களும் தங்களுடைய நல்ல குணங்களை இழந்து விடுகிறார்கள் என்பதை மிகத் தெள்ளத் தெளிவாக இந்த பத்து குறள்களிலும் எடுத்துக்காட்டுகிறார்.

தாழ்ந்த குணங்களைக் கொண்டவரோடும் தாழ்ந்த எண்ணங்களைக் கொண்டவரோடும் இணைந்து சேர்ந்து போக வேண்டாம் என்பது திருவள்ளுவரின் மிக மேன்மையான கருத்தாக மாறுகிறது.

குறள் 451:

சினத்தினால் வரும் பேரழிவு

சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்

சினம் என்னும் குணத்தை வாழ்க்கையில் பெரிய மேன்மையான மக்கள் ஒதுக்கி வைப்பர். ஆனால் தாழ்வான குணம் கொண்ட மக்களோ சினத்தையே சிரத்தில் தூக்கி நிற்பார்.

ஆனால் சினத்தினால் வரும் பேரழிவை உணராமல் சிற்றினம் கொண்ட தாழ்மையான மக்கள் காலங்காலமாக இழி நிலையில் வாழ்வதையே வள்ளுவரின் சிற்றினம் சேராமை தன்னுடைய முதல் குறளிலேயே ஏழு சொற்களிலே எவ்வாறு மக்கள் வாழ பழகிக் கொள்ள வேண்டும் என்றும் சிற்றினம் சேராமை குணம் உள்ளவர்களாக மேன்மையான மக்கள் கெட்ட குணமுடையோருடன் சேராமல் இருப்பார்கள் என்றும், தாழ்மை குணம் உள்ள மக்களோ அவருடைய குண நலமுள்ளவர்களோடே நட்புக் கொள்வார்கள் என்றே அழகாக குறிப்பிடுகிறார்.

இதையே மு.வ, அவர்கள்"பெரியோரின் இயல்பு சிற்றினத்தை அஞ்சி ஒதுக்கும், சிறியோரின் இயல்பு அதையே சுற்றமாக எண்ணித் தழுவிக் கொள்ளும்," என்கிறார்.

பெரியோர் சிற்றினத்தாரோடு சேர அஞ்சி விலகுவர்; சிறுமைக்குணம் கொண்டோர் சிறியோர் கூட்டத்தைச் சுற்றமாக எண்ணிச் சூழ்ந்து கொள்வர் என்பது இக்குறட்கருத்து

குறள் 452:

நீரின் இயல்பு

நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு

படிகத் தெளிவான வானிலிருந்து விழும் மழை, வானில் இருந்து இறங்கி பூமிக்கு வரும் போது, அழகாகத்தான் வந்து இறங்குகிறது. ஆனால், அது கலக்கும் சேறானது அதன் குணத்தையே மாற்றிவிடும். அதுபோல எவ்வளவோ மேல் குணம் உள்ளவர்கள், தாழ்ந்த குணம் உள்ள மக்களோடு இணையும் போது.... நட்பு கொள்ளும் போது அவர்களிடையே தன் நிலை மறந்து அவர்களும் தாழ் நிலைக்கு தங்களை மாற்றிக் கொள்கிறார்கள் என்பதையே வெளிப்படுத்தி காட்டுகிறார்.

தான் சேர்ந்த நிலத்தின் தன்மையால் நீர் தன் இயல்பை இழந்து, நிலத்தின் இயல்பாகவே மாறிவிடும்; மனிதரின் அறிவும் அவர் சேர்ந்த இனத்தின் இயல்பாகவே ஆகிவிடும் என சாலமன் பாப்பையா தன் உரையில் குறிப்பிடுகிறார்.

குறள் 453:

உலகத்தாரால் அடையாளப்படுத்தப்படுதல்

மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்
இன்னா னெனப்படுஞ் சொல்...

வையக மாந்தர் மனதிலும் எண்ணங்களில் நாளும் எழிலாலுமே அவருடைய குணத்தை வளர்த்துக் கொள்ள முடியும்.ஆனால் அவருடைய அடையாளமோ அவர் எந்த இனத்திலிருந்து வந்தார் என்பதை பொறுத்து அது உலகத்தாரால் அடையாளப்படுத்தப்படும் என வள்ளுவன் தன்னுடைய மூன்றாவது குறளில் அருமையாக சுட்டிக்காட்டுகிறார்.

ஒருவரின் உணர்ச்சி, மனத்தைப் பொருத்து அமையும் அவர் இப்படிப்பட்டவர் என்று அளந்து சொல்வது அவர் சேர்ந்திடும் கூட்டத்தைப் பொருத்து அமையும் என கலைஞர் குறிப்பிடுகின்றார்.

குறள் 454:

இனத்தின் ஆற்றலே

மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்
கினத்துள தாகும் அறிவு

ஒருவருடைய மனதில் உள்ள அறிவு அளவு அறிவாளி போல வெளிப்படும். அவருடைய வெளிப்படுத்தும் ஆற்றலானது அவருடைய சொந்த ஆற்றலாக தோன்றினாலும் அவர் சேர்ந்து இருக்கும் இனத்தின் ஆற்றலிலே அது வெளிப்படுகிறது என்பதை தெளிவுபடுத்துகிறார்

அறிவு ஒருவன் மனத்துள் இருப்பது போலத் தோன்றும்; உண்மையில் அது அவன் சேர்ந்துள்ள இனத்தின்பால் இருந்து பெறப்படுவதே ஆகும் என் பரிமேலழகர் தெரியப்படுத்துகிறார்.

குறள் 455:

மனத்தூய்மை:

மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்

ஒருவரின் மனசு கட்டுப்பாடு, அவனுடைய செயல்படும் அன்றாடச் செயல்கள் தூய்மை எல்லாமே ஒருவருக்கு அவருடைய தூய்மையாக தோன்றினாலும் அது அவன் சார்ந்த இனத்தின் மூலமே உருவாகிறதென தெளிவுபடுத்துகிறார்.

மனத்தின் தூய்மை செய்யும் செயலின் தூய்மை ஆகிய இவ்விரண்டும் சேர்ந்த இனத்தின் தூய்மையைப் பொறுத்தே ஏற்படும் என்கிறார் மு.வ.

குறள் 456:

செய்த நற்செயல்கள்:

மனந்தூயார்க் கெச்சநன் றாகும் இனந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை

குறள் 457:

மனத்தின் இயல்பு

மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழுந் தரும்.

மனத்தின் இயற்பில் நற்குணம் கொண்டோர்கள் வாழ்வில் சான்றோர்களாக இருந்தாலும் அவர்கள் சார்ந்த இனமே அவர்களை இன்னும் மேன்மக்களாக காண்பிக்கும்.

மனத்துயர் மாண்பு எனும் வரிகளிலே எத்தனை தான் மாந்தர்கள் தங்களுடைய சுய முன்னேற்றத்திலும் பிறர் நலத்திலும் ஈடுகொண்டாலும் எண்ணத்திலும் எழுத்திலும் செயலிலும் அவர்கள் சான்றோர்களாக திகழ்ந்தாலும் அவர்கள் சார்ந்த இனமே அவர்களை இன்னும் மேன்மையான மக்களாக உலகின் மனிதர்களின் மாமனிதர்களாக எடுத்துப் பேசும்.

இதை, சாலமன் பாப்பையா விளக்க உரையில்

நிலைபெற்று வரும் உயிர்களுக்கு மனநலம் சிறந்த செல்வம் தரும்; இன நலமோ எல்லாப் புகழையும் தரும் எனக் கூறுகின்றார்.

குறள் 458:

அதிக காவல்:

மனநலம் நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநலம் ஏமாப் புடைத்து

மனத்தின் நன்குணம் கொண்டோர்களாக – சான்றோர்களாக இருந்தாலும், அவர்கள் மனதின் நன்மையை உறுதியாகக் கொண்டிருந்தாலும் அவர்கள் சார்ந்த இனமே அவர்களுக்கு இன்னும் அதிக காவலாக அமையும் என்று வள்ளுவன் குறிப்பிடுகிறார்.

இதையே, மு.வ. அவர்கள்., மனதின் நன்மையை உறுதியாக உடையவராயினும் சான்றோர்க்கு இனத்தின் நன்மை மேலும் நல்ல காவலாக அமையும் என்கிறார்.

குறள் 459:

மறுமையில் உதவி:

மனநலத்தி னாகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தி னேமாப் புடைத்து

ஒருவருக்கு மனத்தினால் எழும் நல்ல எண்ணங்களும் பிறர் நலத்தில் ஆர்வங்களும் அவர் செய்யும் நற்செயல்களும் மறுமையை பெற்றுத்தரும். இருப்பினும் அவர்கள் சார்ந்த இனம் இன்னும் அவர்களுக்கு மறுமையில் உதவியைப் பெற்றுத் தருவதோடு மாட்சியை வரவழைக்கும் என்றும் வள்ளுவர் குறிப்பிடுகிறார் என்பது மனத்தின் கண் மாசிலன் ஆதல் என்பது மனதில் எழும் உயர்ந்த எண்ணங்களும் ஆற்றல் மிகு செயல்களுமே அந்த தனி மனிதருக்கு மறுமையில் வீடு பேற்றைப் பெற்றுத் தரும் என்றும் அவர் சேர்ந்த இனத்தின் மூலம் இன்னும் மறுமையில் அவர் மாட்சியோடு வழங்குவார் என்றும் வள்ளுவன் குறிப்பிடுகிறார்.

குறள் 460:

துணை:

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉ மில்

ஒருவருக்கு நல்ல இனம் தான் துணையாக இருக்கும்என்றும், தீய இனத்தோடு சேர்வதைக் காட்டிலும் துன்பம் தரக்கூடியதும் எதுவுமே இல்லை. அவர்கள் சார்ந்த இனமே அவர்களை இன்னும் மேன்மையான மக்களாக உலகின் மனிதர்களின் மாமனிதர்களாக எடுத்துப் பேசும்.

கெட்ட இனமோ அவர்களுக்கு அதிகத் துன்பத்தை தருவதோடு

அவர்களை இழி நிலைக்கே எடுத்துச்செல்லும் என்று வள்ளுவன் குறிப்பிடுகிறார்.

இதையே கலைஞர், நல்ல இனத்தைக் காட்டிலும் துணையாக இருப்பதும், தீய இனத்தைக் காட்டிலும் துன்பம் தரக்கூடியதும் எதுவுமே இல்லை என்கிறார்.

முடிவுரை:

மனதின் தூய்மையை பொறுத்தே மாந்தரின் வாழ்க்கையும் அமையும் என்றும் தாழ்ந்த குணங்களுடைய மக்களோடு சேர்ந்து நம்மையும் தாழ்த்திக் கொள்ளாமல் உயர்ந்த குலத்தோடு உள்ள மக்களோடு இணைந்து வாழ வேண்டும் என்றும் அவ்வாறு வாழும் போது தான் மனித குலம் மேம்படையும் என்றும் இல்லையெனில் மழை நீர் ஆனது சேற்றிலே கலந்து உடன் அதன் குணமே மாறிவிடுவது போல நல் மாந்தரின் குணங்களும் தாழ்ந்த குணத்தை உடைய மக்களோடு சேரும்போது தரம் கெட்டுப் போகிறது என்பதே திருவள்ளுவர் இந்த பத்து அழகிய குறள் பாக்களிலும் மிகத் தெளிவாக நமக்கு குறிப்பிட்டுள்ளார்.

மண்ணில் பிறக்க மாதவம் செய்த மாந்தராகிய நாமும் நற்குணங்களைக் கொண்டு மழை நீராக உயர்ந்த குணத்தோடு வாழ்ந்து, நல்ல நிலத்திலே விழும் நல்ல மழை துளியாக இவ்வுலக உயிருகளுக்கு உதவிடும் உயர்குணம் உள்ள மாந்தராக வாழ்ந்து, வாழ்க்கையை வளத்துடன் வழிநடத்தி இவ்வாறு ஒரு மனிதன் இவ்வுலகில் வாழ்ந்தால் என்று வரலாறு சொல்லும் படி நாம் இவ் வாழ்க்கையில் இருந்து விடைபெற வேண்டும் என்று வள்ளுவன் நமக்கு மிக அழகாக வழிகாட்டுகிறார்

சிறு குணம் கொண்டவர்களோடு சேராமல் இருப்பதையும் அதன் சேர்ந்தால் அதன் விளைவுகளையும் மிக அழகாக எடுத்துக்காட்டும் வள்ளுவர் தன்னுடைய 46 ஆம் அதிகாரத்தில் மழை நீரானது எவ்வளவு அழகான வெள்ளி கம்பியாக பூமியிலே விழுந்து அது சேரும் இடத்திலே சேரா இருந்தால் சேரோடு இணைந்து அதன் தன்மையை இழந்து விடுகிறது என்பதையும் மாந்தர்தம் நற்குணங்களும் சிறு குனங்குழு தாழ்ந்த குணங்களை உள்ள மனிதரோடு சேரும்போது அவ்வாறு மாறி போகிறது என்பதையும் மிகத் தெள்ளத் தெளிவாக தெய்வப்புலவர் இந்த பத்து குரல்களிலும் நமக்கு அழகாக எடுத்துக்காட்டுகிறார்

பொதுமறையாம் திருவள்ளுவரின் திருக்குறளில் சிற்றினம் சேராமை அதிகாரத்தில், வள்ளுவர், இவ்வுலகில் சிற்றினம் சேராமையால் மனித குலத்திலன் மாண்புகள் எவ்வளவு உயர்ந்ததே என்றே எடுத்துரைக்கிறார்.

குறள் வழி

திருக்குறள் முற்றோதல் மாத மின்னிதழ்

"குறள் வழி" இதழ் அதிகமானவர்களுக்கு சென்று சேரவும், இதை வடிவமைப்பு முதல் அனுப்புவதுவரை இதற்கென ஒரு சிறு ஊதியத்தில் தொய்வில்லாமல் வெளிவர உதவும் நோக்கில் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.

We are looking for Advertisers and sponsors to take Kural Vazhi to more people and more places and engage professional designer and distribution resources.

TO SUPPORT: kuralvazhi@gmail.com

More from Kural Mutrothal

குறள் வழி - மாத மி...
February 1, 2024

குறள் வழி - மாத மி...
December 23, 2023

குறள் வழி - மாத மி...
November 9, 2023

குறள் வழி - மாத மி...
October 10, 2023

https://www.valaitamil.com/literature_thirukkural_kural-vazhi/

வள்ளுவர்

அறிவியல் மற்றும் மேலாண்மைக் கல்லூரி

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றது

தேசிய தர நிர்ணயக் குழுவின் A+ சான்றிதழ் பெற்றது. (முதல் சுழற்சி)

கரூர் –மதுரை தேசிய நெடுஞ்சாலை , புதாம்பூர் அஞ்சல் , கரூர் மாவட்டம் , தமிழ்நாடு– 639003

ஞான-விஞ்ஞான விமுக்தயே
2(f) & 12(B) status by UGC

குறள் சொல்வோம்..!
குறள் வழி வாழ்வோம்..!

A+ GRADE ACCREDITED BY NAAC

AICTE

மாணவ- மாணவியர்களுக்கு ஓர் இனிய செய்தி

2024-2025 ஆம் கல்வியாண்டில் நமது வள்ளுவர் கல்லூரியில் சேரும் மாணவ மாணவியர்களுக்கு மூன்றாண்டுகளுக்கும் இலவசக் கல்வி!

- 500 திருக்குறள்களை ஒப்புவித்தால் ஒரு வருடம் கல்லூரிக் கட்டணம் இலவசம்.
- 1000 திருக்குறள்களை ஒப்புவித்தால் இரண்டு வருடம் கல்லூரிக் கட்டணம் இலவசம்.
- 1330 திருக்குறள்களை ஒப்புவித்தால் மூன்றாண்டும் கல்லூரிக் கட்டணம் இலவசம்.

COURSES OFFERED

UNDER GRADUATE PROGRAMMES:
- B.A. English
- B.A. Tamil
- B.A. Public Administration
- BBA
- B.Com
- B.Com. (Computer Applications)
- B.Com. (Professional Accounting)
- BCA
- B.Sc. Computer Science
- B.Sc. Fashion Technology & Costume Designing
- B.Sc. Hotel Management & Catering Science
- B.Sc. Mathematics
- B.Sc. Physics

POST GRADUATE PROGRAMMES:
- M.A. English
- M.Com. (Computer Applications)
- M.Sc. Computer Science
- M.Sc. Mathematics

RESEARCH PROGRAMMES:
- M.Phil. Commerce
- Ph.D. Commerce

DIPLOMA COURSES:
- Diploma in Food Production
- Diploma in Banking & Finance

PROFESESSIONAL PROGRAMME
- M.B.A

@ valluvarcollege @VCSM Events www.vcsm.ac.in 9944450507 / 9791726481 / 9791736481